Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.389/2025

Dated 15-12-2025
Deposition of witness for : PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திக் | வயது | : | 41 |
| தந்தை பெயர் | : | ஈஸ்வரன் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | டிபன் கடை |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld. D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். டிபன் கடை வைத்துள்ளேன்.

2) ஆஜர் எதிரியை தெரியும். இறந்துபோன திருவேங்கடம் என் தெருவை சேர்ந்தவர்.

3) 6.7.2025 அன்று இரவு 7 மணியளவில் நான் கணபதி நகரில் உள்ள ரெட்கிராஸ் பில்டிங் எதிரே திருவேங்கடம் இறந்து கிடந்தார். எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது.

4)போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

5)இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

(சாட்சியானர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின்படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1) போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அப்போது 6.7.2025 அன்று மதியம் சுமார் 3 மணியுளவில் நானும் ஜெயகுமார் என்பவரும் RED CROSS BUILDING அருகில் பேசிக்கொண்டிருந்ததாகவும் அப்போது கணபதி நகர் கீழதெருவில் வசித்து வரும் ஆஜர் எதிரிக்கும் அவர் அண்ணன் திருவேங்கடத்திற்கும் சண்டை வந்து ஒரே சத்தமாக இருந்தது என்றும்,

2) நாங்கள் இருவரும் இவர்களுக்கு இதே வேலை என்று சொல்லிவிட்டு வேலைக்கு போய்விட்டதாகவும் பின்பு மாலை சுமார் 7 மணியளவில் திரும்பவும் நானும் ஜெயகுமாரும் வந்து டீ கடையில் டீ சாப்பிட்டுவிட்டு என்ன சண்டை என்று விசாரிக்க போனதாகவும்,

3) அப்போது திருவேங்கடம் வீட்டின் உள்ளே போனபோது திருவேங்கடம் ரத்த வெள்ளத்தில் தரையில் கிடந்தார் என்றும் அறிவழகன் அவருடைய கையில் ரீப்பர் சட்டத்தை வைத்துக்கொண்டு எனது தம்பியை நானே அடித்து கொன்றுவிட்டேன் என்று

பதற்றத்துடன் எங்களை கடந்து ஓடினார் என்றும்,.

4) உடனே நாங்கள் அவங்க அம்மாவுக்கு தகவல் சொன்னதாகவும் பிறகு அவங்க அம்மா மகாலட்சுமி, துரைமுருகன் ஆகியோர்கள் வந்தார்கள் என்றும் வந்துபார்த்தபோது திருவேங்கடம் மூச்சு பேச்சு இல்லாமல் ரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்